முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1596

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கந்தப் பெருமான் என் மகா சக்தியாக
கலியினில் அவதாரம் எடுத்த அரங்கனே
செந்தூரான் யானும் உந்தனுக்கு
சித்திபல சூட்சுமமாய் நித்தம் நித்தம் அனுகி ஆற்றலாய் தர
2. தருகவே அரங்கன் உன் சக்தி நிலை இன்னும் கூட
அறிவிப்பேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது கலை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் தை மாதம் 28 ம் நாள், 11.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு ஆற்றல் கூட்டி
தக்கப்படி ஒவ்வொரு முழுமதியிலும்
வகையில்லாத அதீத கலியின் இடர்கள் அத்தனையும்
அகற்றி காத்துவரும் ஆற்றலை வரமாக தந்து வருகின்றேன்
4. சித்தி தரும் உயர்வான அரங்கன் மார்க்கம்
சிந்தை தெளிவு சிறப்பறிவு கூட்டி மக்களை காப்பதோடு
காப்பதோடு இந்த கலியினில் மகாசக்தி சொரூபமாக
கந்தப்பெருமான் யானே ஆளுகின்ற வண்ணம்
5. வண்ணமுடன் அற்புதம் கலியினில் நடத்த இருக்க
வரவேற்று அரங்கன் அவதாரத்தை உலகோர் மகிழ்ந்து
விழா எடுத்து இனிதே அரங்கனின் நாமஜெபத்தை போற்றி
அறத்தை தடையற தொடர்ந்து செய்து வர
6. வரமாக இந்தப் பேருலகம்
வையகத்தில் ஞானவான்கள் ஆட்சிக் காலமாக
ஞான ஆட்சிக் காலமாக மாறுதல் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–